## சமத்துவத்தை அறிவுறுத்தும் - சமூக சமத்துவத்திற்கான மருத்துவர்கள் சங்கத்தின் பணிகள் தொடரட்டும்!

# திராவிட மாடல் அரசும் - நமது முதல்வரும் உங்களுக்குத் துணை நிற்பார்கள்!

## சங்கத்தின் 4-ஆவது மாநில மாநாட்டில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உறுதி!

**சென்னை, நவ.28-**

**சென்னை-கலைவாணர் அரங்கில், நேற்று முன்தினம் (26.11.2023) சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் 4-ஆவது மாநில மாநாட்டில் பங்கேற்றுச் சிறப்புரையாற்றிய, இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், "இனி வரும் காலங்களிலும் சமத்துவத்தை வலியுறுத்தும் - சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பணிகள் தொடரட்டும்! உங்களுக்கு நம்முடைய திராவிட மாடல் அரசும், நமது முதலமைச்சரும் துணை நிற்பார்கள்!" என்று குறிப்பிட்டார்.**

சென்னை கலைவாணர் அரங்கில், சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கங்களின் 4வது மாநில மாநாடு மற்றும் சங்கத்தின் 20வது ஆண்டு தொடக்க விழா, நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பரிசு பெற்ற மருத்துவர்களுக்கு பரிசுகள் வழங்கி வாழ்த்திப் பேசினார்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கங்களின் 4வது மாநில மாநாடு மற்றும் சங்கத்தின் 20வது ஆண்டு தொடக்க விழாவில் கலந்து கொண்டு உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். பெருமை அடைகின்றேன்.

இந்தச் சங்கம் இடதுசாரி இயக்க சங்கம் என்றாலும், நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்துடன் எப்பொழுதும் ஒரு நெருக்கமான உறவைக் கொண்ட ஒரு சங்கம். அந்த உணர்வோடுதான் என்னை இந்த மாநாட்டிற்கு அழைத்துள்ளீர்கள். நானும் அதே உணர்வோடு அன்போடு இந்த மாநாட்டிலே கலந்து கொண்டு இருக்கின்றேன்.

திராவிட இயக்கமாகட்டும், இடதுசாரி இயக்கமாகட்டும் - இரண்டுமே சமூகச் சமத்துவத்திற்காகத்தான் தொடர்ந்து போராடி வந்து கொண்டிருக்கின்றன. சமூக சமத்துவத்தைப் பெயரிலேயே கொண்டு செயல்பட்டு வரும் உங்களுடைய சங்கத்தின் பணிகளை நான் பாராட்டுகின்றேன். வாழ்த்துகின்றேன்.

### 'நீட்'டை கடுமையாக எதிர்த்தது இந்த அமைப்பு!

உங்களுடைய எந்தப் போராட்டமாக இருந்தாலும் சரி, கோரிக்கையாக இருந்தாலும் சரி, அதில் நம்முடைய மாநில உரிமைகள்தான் முதன்மையானதாக இருக்கும். குறிப்பாக, ஒன்றிய அரசு நீட் தேர்வைத் திணித்தபோது அதனைக் கடுமையாக எதிர்த்த சங்கம் எதுவென்றால், அது இந்த சமூக சமத்துவத்துக்கான டாக்டர்கள் சங்கம்தான்.

திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் பல்வேறு பிற அரசியல் கட்சிகள், பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் எதிர்த்த நீட்டை மருத்துவர்களும் எதிர்க்க, உங்கள் சங்கம் முன்னெடுத்த பணிகள்தான் மிக மிக முக்கியமான காரணம்.

### 'நீட்'டுக்கு எதிராக உண்ணாவிரதத்தில் உணர்ச்சிமிக்க உரைகள்!

அதுபோல் நீட் தேர்வு எதிர்ப்புக் களத்தில், நம்முடைய இயக்கத்துடன் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இணைந்து சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கமும் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது.

நீட் தேர்வுக்கு எதிராகத் திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி, மருத்துவர் அணி, மாணவர் அணி சமீபத்தில், ஆகஸ்ட் 20ஆம் தேதி நடத்திய தமிழ்நாடு முழுவதும் நடத்திய அந்த மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டத்தை நாம் அனைவரும் இணைந்து நடத்தினோம்.

சங்கத்தின் பொதுச் செயலாளர் ரவீந்திரநாத் அவர்களும் அவருடைய துணைவியார் சாந்தி அவர்களும் அந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டு உணர்ச்சி மிக்க உரையை ஆற்றினார்கள்.

உங்கள் சங்கத்தின் மருத்துவர்கள், மாணவர்கள் பலரும் அந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டார்கள். அதற்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். கழக அரசு அமைந்ததும் நீட் தேர்வால் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைக் கண்டறிவதற்காக ஓய்வுபெற்ற நீதிபதி ஏ.கே.ராஜன் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவில், இந்த சங்கத்தின் பொதுச் செயலாளர் மருத்துவர் ரவீந்திரநாத் அவர்களும் இடம்பெற்றிருந்தார். சட்டப்பேரவையில் நீட் விலக்கு மசோதா கொண்டுவரப்பட்டதில் மருத்துவர் ரவீந்திரநாத் அவர்களின் கள ஆய்வுகளும், கருத்துகளும் மிக மிக முக்கியமானவை.

### 50 லட்சம் கையெழுத்துகள்! விரைவில் இலக்கை அடைவோம்!

அந்த மசோதாவில் ஒப்புதல் பெறத்தான் இப்போது `நீட் விலக்கு நம் இலக்கு' என்ற அந்த கையெழுத்து இயக்கத்தைத் தொடங்கி உள்ளோம். இந்த மாநாட்டில் நான் பங்கேற்க வேண்டும் என்று, என்னை அழைப்பதற்காக என்னைச் சந்தித்தபோது நம்முடைய `நீட் விலக்கு நம் இலக்கு' என்ற கையெழுத்து இயக்கத்திற்கு ஆதரவளித்து உங்களுடைய நிர்வாகிகள் எல்லாம் கையெழுத்திட்டிருந்தார்கள். அதற்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்து இலக்கு என்று அந்தக் கையெழுத்துப் போராட்டத்தைத் தொடங்கினோம். இன்றோடு 39 லட்சம் கையெழுத்துக்களை நாம் பெற்றுள்ளோம். இணையதளத்தின் மூலமாக 29 லட்சமும் போஸ்ட் கார்டுகள் மூலமாக 10 லட்சம் கையெழுத்துகளும் பெற்றுள்ளோம். அடுத்த பத்து பதினைந்து நாட்களுக்குள் அந்த இலக்கை, 50 லட்சம் கையெழுத்துக்களைப் பெற்று இலக்கை அடைவோம் என்று அந்த நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

### 'நம்மவர்கள் மருத்துவம் படிக்கக்கூடாது' எனும் பாசிச ஃபில்டர்கள்!

ஆனால், என்றைக்குத் தமிழ்நாட்டிலிருந்து நீட் முழுமையாக ரத்து செய்யப்படுகின்றதோ அன்றைக்குத்தான் ஒட்டுமொத்த மருத்துவர்களுக்கும், மாணவர்களுக்குமான அந்தப் போராட்டம் வெற்றிபெற்றதாக நாம் கருத முடியும். நீட் எதிர்ப்புக்கான அந்தக் கடிதங்கள், நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பப்பட இருக்கின்றன.

நாம் நீட்டிற்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கும்போது ஒன்றிய அரசு அடுத்து நெக்ஸ்ட் என்ற தேர்வைக் கொண்டு வருகிறார்கள். நெக்ஸ்ட் நாம், நெக்ஸ்ட் தேர்வை எதிர்த்துப் போராட்டத்தை நடத்த வேண்டும். பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் மருத்துவப் படிப்பில் நுழைவதற்கு நீட் கொண்டு வந்தார்கள்.

இப்பொழுது மருத்துவம் படிக்கும் மாணவர்கள் பட்டம் பெறுவதற்கு நெக்ஸ்ட் தேர்வைக் கொண்டு வருகிறார்கள். மருத்துவப் படிப்புக்கு உள்ளே நுழைய நீட். படிப்பை முடித்து வெளியே வர நெக்ஸ்ட். இந்தத் தேர்வுகளில் எல்லாம் யார் மருத்துவப் படிப்பு படிக்க வேண்டும் என்பதற்கான தேர்வுகள் அல்ல.

யார் மருத்துவம் படிக்கக் கூடாது என்பதற்கான பாசிச பில்டர்களாக நாம் பார்க்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால் மருத்துவப் பட்டம் பெற்ற மாணவர்கள் பி.ஜி. படிப்பதற்கும் நெக்ஸ்ட் கொண்டு வருகிறார்கள். மருத்துவப் படிப்பையும் சுகாதாரத் துறையையும் ஒன்றிய அரசே முழுதாகக் கன்ட்ரோல் செய்யப் பல்வேறு திட்டங்களைத் தொடர்ந்து தீட்டி வருகின்றது ஒன்றிய அரசு. இந்த மாதிரி நெருக்கடியான நிலையில்தான் இந்த சமூகச் சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் தேவையும் அதிகமாகத் தேவைப்படுகின்றது.

ஒரு அமைப்பையோ, ஒரு சங்கத்தையோ ஆரம்பிப்பது பெரிய காரியமல்ல. அதை உயிர்ப்புடன் வைத்திருப்பது, அதன்மூலம் அந்த சங்கத்தினருக்கும், பொது மக்களுக்கும் நன்மைகளைப் பெற்றுத்தருவது தான் மிகவும் சவாலான விஷயங்கள். அந்தச் சவாலை மிகச்சிறப்பாக இந்த சங்கம் கையாண்டு வருகின்றது. அதற்கு ஒரு உதாரணத்தை இங்கே நான் சொல்ல விரும்புகின்றேன்.

2007ஆம் ஆண்டு முதலமைச்சராக நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இருக்கிறார்கள். அப்பொழுது ஒன்றிய அரசு ஒரு திட்டத்தைக் கொண்டு வருகிறது. ஆரம்ப சுகாதார நிலையங்களை நோயாளிகள் நலச்சங்கங்கள் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு செல்வதுதான் அந்தத் திட்டம்.

### வணிக நோக்கமற்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள்!

அதன்படி ஆரம்ப சுகாதார நிலையத்தில் கர்ப்பிணிப் பெண்களுக்கான மருந்து மாத்திரைகளை விற்பனை செய்யலாம். ஆரம்ப சுகாதார நிலையத்தை விற்கலாம். ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் அமைக்கலாம். இதுதான் அந்தத் திட்டம். இதை நம்முடைய, இந்தச் சங்கம் கடுமையாக எதிர்த்தது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் இந்தப் பிரச்சினையைச் சுட்டிக் காட்டினார். ஏழை, எளிய மக்களுக்காக மாநில அரசினுடைய நிதியால் மாநில அரசால் உருவாக்கப்பட்ட மருத்துவர்கள், செவிலியர்களைக் கொண்டு தொடங்கப்பட்டதுதான் ஆரம்ப சுகாதார நிலையங்கள். ஒன்றிய அரசு எடுத்துக் கொண்டு வரும் இந்தத் திட்டத்தை, தமிழ்நாடு அரசு ஒருபோதும் ஏற்காது என்று ரவீந்திரநாத் அவர்களிடம் நம்முடைய அப்போதிருந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உறுதி அளித்தார்கள்.

அதன்படி அந்தத் திட்டத்தில் 13 மாற்றங்கள் கொண்டு வந்து, ஆரம்பச் சுகாதார நிலையங்களைக் கலைஞர் அவர்கள் பாதுகாத்தார்கள். அதன் காரணத்தால்தான் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டணமின்றி, வணிக நோக்கமின்றிச் செயல்பட்டு வருகின்றன. இப்படிப் பல்வேறு பெருமைகளைக் கொண்டதுதான் இந்த சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம்.

### நமது மருத்துவக் கல்வியை உருக்குலைக்கத் துடிக்கும் சக்திகள்!

இந்திய ஒன்றியத்திலேயே சுகாதாரக் குறியீடுகளில் தமிழ்நாடுதான் முன்னிலையில் இருக்கிறது என்றால், அதற்கு முக்கியக் காரணம் இங்கே இருக்கக்கூடிய மருத்துவர்களாகிய நீங்கள்தான்.

இந்த முன்னேற்றம் இன்றைக்கு, நேற்றைக்கு வந்த முன்னேற்றம் அல்ல. இதற்கு விதை போடப்பட்டது 100 ஆண்டுகளுக்கு முன்பு.

அதற்கு மிக, மிக முக்கியமான காரணம், நீதிக்கட்சியைத் தோற்றுவித்த இருவர். டாக்டர் நடேசனார், டாக்டர் நாயர் ஆகிய இருவரும் மருத்துவர்கள். 1925ஆம் ஆண்டு அந்தக் காலகட்டம் வரை மருத்துவம் படிக்க டாக்டராக வேண்டுமென்றால் சமஸ்கிருதம் தெரிய வேண்டும் என்று இருந்தது.

அந்த விதியை முடிவுக்குக் கொண்டு வந்தவர், நீதிக்கட்சியின் பனகல் அரசர்தான். இன்னார்தான் மருத்துவம் படிக்க வேண்டும் என்று இருந்த அந்த விதியை, நம் முன்னோர்கள் தகர்த்து ஒரு நூற்றாண்டு நெருங்கும் தருணத்தில் இப்போது இருக்கின்றோம்.

1925ஆம் ஆண்டுக்கு முந்தைய நிலைபோல, மருத்துவக் கல்வியை உருக்குலைக்கத் துடிப்பவர்களை எதிர்த்து இன்றும் போராடிக்கொண்டிருக்கிறோம்.

தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பு இன்றைக்கு உலகமே வியக்கும் வகையில் இருக்கின்றது. 2007ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் எடுத்த முயற்சியால் இன்றைக்கு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டத்திற்கும் ஒரு மருத்துவக் கல்லூரி என்ற நிலை இங்கு உருவாகி இருக்கிறது என்றால், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞரின் தொலைநோக்குப் பார்வை அது.

### அகில இந்திய அளவில் இடஒதுக்கீடு! உரிமையை நிலைநாட்டிய நமது முதல்வர்!

இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் அரசு, தமிழ்நாட்டில் மருத்துவக் கட்டமைப்பை மேலும் அதிகரிக்கும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, 250 கோடி ரூபாய் செலவில், கலைஞர் உயர் சிறப்பு மருத்துவமனையை, கிண்டியில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

அகில இந்திய அளவிலான ஒதுக்கீட்டில், மருத்துவ இடங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சட்டப் போராட்டம் நடத்தி நிலைநாட்டினார்கள்.

### விதி அல்ல! மத்திய அரசின் சதி!

இந்தச் சாதனைகளை முறியடிக்க, நடக்கும் சதிகள் கொஞ்ச நஞ்சம் அல்ல. ஒரு மாநிலத்தில் 10 இலட்சம் பேருக்கு 100 எம்.பி.பி.எஸ் இடங்கள் என்ற புதிய விதியை நேஷனல் மெடிக்கல் கவுன்சில் கொண்டு வந்துள்ளது. அதை விதி என்று சொல்வதை விட ஒன்றிய அரசினுடைய சதி என்று தான், நாம் சொல்ல வேண்டும். நம்முடைய முதலமைச்சர் அவர்களின் எதிர்ப்பால் அதை அமல்படுத்துவதை இப்போது தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளார்கள். அது எப்போது வந்தாலும், நம்முடைய தமிழ்நாடு அரசும் நம்முடைய முதலமைச்சர் அவர்களும் எதிர்ப்பார்கள்.

### பணம் குவிக்கும் இடங்களாக - 'நீட்' கோச்சிங் சென்டர்கள்!

நீட் தேர்வில் நடைபெற்று வரும் குளறுபடிகள் பற்றி, என்னைவிட உங்களுக்கு அதிகம் தெரியும். தரமான மருத்துவர்களை உருவாக்குகிறோம் என்று, ஏழை எளிய மாணவர்களின் மருத்துவக் கனவைச் சிதைத்து கோச்சிங் சென்டர்களை பணம் குவிக்கும் இடமாக, நீட் தேர்வு மாற்றி உள்ளது.

இதனால் தமிழ்நாட்டில் 22 மாணவ மாணவிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள்.

இப்பொழுது தமிழ்நாடு மட்டுமல்ல, மற்ற மாநிலங்களிலும் இந்தத் தற்கொலைகள் அதிகமாகி இருக்கின்றன. இந்தக் கொடுமைகள் போதாது என்று நீட் தேர்வில் 0 சதவீதம் இருந்தால் கூட போதும் எனப் புதுப் புதுக் குளறுபடிகளும் உள்ளே வருகின்றன.

நுழைவுத்தேர்வு என்பதே யாரெல்லாம் நுழையக்கூடாது என்பதற்கான தேர்வுதான் என்பதில் நாம் தெளிவாக இருப்பதால்தான் தொடர்ந்து நீட் தேர்வுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம்.

இந்த மாநாட்டின் மூலம் சங்கம் ஒன்றிய அரசை வலியுறுத்தும் தீர்மானங்களை நான் வாசித்தேன். மருத்துவத்திற்குள்ளும் பாசிஸ்ட்டுகள் அவர்களின் மதவாதத்தைத் திணித்து, நவீன அறிவியல் மருத்துவத்தை ஒழிக்க முயற்சிப்பதை எதிர்ப்பது, நீட் தேர்வைத் தொடர்ந்து அடுத்ததாக அவர்கள் திணிக்க நினைக்கும் நெக்ஸ்ட் தேர்வை எதிர்ப்பது, மருத்துவக் கல்வி, மருத்துவ சேவையில், மாநிலங்களின் உரிமைகளைப் பறிக்க முயல்வதை எதிர்ப்பது உள்ளிட்ட எட்டுத் தீர்மானங்கள் இங்கு நிறைவேற்றப்படுகின்றன.

இவை மருத்துவர்களுக்கும், மருத்துவ மாணவர்களுக்கும் மட்டுமல்ல. ஒட்டுமொத்த பொதுமக்களின் நலனுக்கும் மிக மிக அவசியமானது. இந்த சங்கம் 20 ஆண்டுகால அனுபவத்தில் கோரிக்கைகள், அறப்போராட்டங்கள் மூலம் எத்தனையோ வெற்றிகள் கண்டிருக்கிறது. இங்கேயும் சில கோரிக்கைகளை இந்த நிகழ்ச்சியில் வைத்திருக்கிறார்கள்.

நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அண்ணன் மா.சு. அவர்களும் வாக்குறுதியைக் கொடுத்துள்ளார்கள். நீங்கள் வைக்கக்கூடிய கோரிக்கை அத்தனையும் நம்முடைய முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சென்று கண்டிப்பாக விரைவில் நிறைவேற்றித் தரப்படும் என்று அந்த வாக்குறுதியும் நான் இங்கே அளிக்கின்றேன்.

இனி வரும் காலங்களிலும் சமத்துவத்தை அறிவுறுத்தும் உங்களுடைய பணிகள் தொடரட்டும். உங்களுக்கு நம்முடைய திராவிட மாடல் அரசும், நம்முடைய முதலமைச்சர் அவர்களும் துணை நிற்பார்கள்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.





தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்களின்படி திருத்துறைப்பூண்டி நகராட்சி பேருந்து நிலைய விரிவாக்கப் பணிகளை நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நகர்மன்றத் தலைவர் கவிதா பாண்டியன் துவக்கி வைத்தார். சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.எஸ்.பாண்டியன் , நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்.

## தாயுமானார் முதல்வர் தடம் செல்லும் தகைமை வாழி! நீடூழி!



தந்தையர் கலைஞர் தம்வழித் - தந்தை
தாயுமானார் முதல்வர் தம்வழி!
முந்தையர் மரபுவழி முனைப்புடன் - எழுச்சி
முதிர்ச்சிப் பயிற்சியின் உச்சம்
சிந்தை மாசிலாத் திறம்அறம் - நடைமுறை
செயலாக்கம் காணும் வேகமுடன்
விந்தை உதயநிதி இஸ்டாலின் - கழக
வேர்காக்கும் இளைஞரணிக் கோவே!

கருவிலே திருவென்பார் கண்முன் - காணும்
காலங்களை வெல்லும் கதிரவனே!
வருமுன் காக்கும் வரலாற்று - நாயகனே
வரிப்புலிகள் பரம்பரை நிலைஒளியே!
திருநாடு தமிழ்நாடு செய்தவக் - கலைஞர்
செந்தமிழ் உருஉயிர்த் தி.மு.க.
பெருஇயக்கம் பீடுறவே வளர்க்கும் - தகைமைப்
பேறுதமிழ் நாடுநிதியே! வாழி! நீடூழி!

உடலோம்பும் உயிரோம்பும் உரிமைப் - பாதை
உயர்விளை யாட்டுதுறை அமைச்ச!
கடல்நன்னீ ராகியே தேவைக்குத் - தகவேதான்
கரைபுரண்டு வருமுயற்சிக் கற்பகமே!
திடமனத்தால் சாதிமத மோதலாம் - சனாதனம்
திருத்தியே சமத்துவம் ஆக்கம்செய்
அடலேறு முதல்வரின் அருமகனே - கலைஞர்
ஆருயிர்ப்பேரனே உதயநிதி இஸ்டாலினே
வாழி! வாழி! நீடூழியே!



**-பெருங்கவிக்கோ**
**வா.மு.சேதுராமன்**
(உலக அமைப்பாளர், பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்)